# நீதிச்சேவை ஆணைக்குழு

## இலங்கை நீதிச்சேவையில் நிலவும் வெற்றிடங்கள்

இலங்கை நீதிச்சேவையின் IIஆம் வகுப்பின் Iஆம் தரத்திற்குரிய (நீதவான்) பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. உரிய தகைமைகளை பூர்த்தி செய்துள்ள நபர்கள், பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 19.07.2024 திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அனுப்பி வைத்தல் வேண்டும். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் விண்ணப்பதாரியின் முகவரி தெளிவாக குறிப்பிடப்பட்ட ரூபா. 110 பெறுமதியுடைய முத்திரையிடப்பட்ட தபால் உறை (பதிவுத்தபாலில் பரீட்சை அனுமதி அட்டையை அனுப்புவதற்காக) ஒன்றினை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

02. **சம்பள அளவுத்திட்டம் :** ரூ. 75,000 - 10 x 1630 - 91,300 இச்சம்பள அளவானது முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 01/2018 அமைவாக) சம்பளத்திற்கு மேலதிகமாக நீதிமன்ற அதிகாரிகளுக்குரிய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

03. **சகல விண்ணப்பதாரிகளும் -**

(அ) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) நன்நடத்தையும் தேக ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(இ) இலங்கையின் அனைத்து பாகங்களிலும் சேவையாற்றக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

04. **தகைமைகள்**

(அ) விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதிக்கு முன்னதாக தொழில் நியாயசபையின் தலைவராக இரண்டு வருடங்களுக்கு குறையாத சேவைக்காலத்தை கொண்டிருத்தல் வேண்டும். அல்லது

(ஆ) விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதிக்கு முன்னதாக நான்கு வருடங்களுக்கு குறையாமல் வினைத்திறன் மிக்கவாறு வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அல்லது ஈடுபட்ட வழக்கறிஞராக இருத்தல் வேண்டும். அல்லது

(இ) விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதிக்கு முன்னதாக ஏதேனுமொரு அமைச்சில் அல்லது அரச திணைக்களம் ஒன்றில் அல்லது அரச கூட்டுத்தாபனம் ஒன்றில் சட்ட அதிகாரியாக நான்கு வருடங்களுக்கு குறையாத சேவைக் காலத்தைக் கொண்ட வழக்கறிஞராக இருத்தல் வேண்டும். அல்லது

(ஈ) விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதிக்கு முன்னதாக ஏதேனுமொரு கம்பனியில் அல்லது வங்கியில் அல்லது சட்ட அதிகாரியாக நிறுவனத்தில் சட்டஅதிகாரியாக 4 வருடங்களுக்கு சேவைக்காலத்தை கொண்டவராகவும் அக்காலப்பகுதியில் தொடர்ச்சியாக நீதிமன்றத்தில் தோன்றிய வழக்கறிஞராகவும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு :**

மேலே (ஆ), (இ) மற்றும் (ஈ) பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள "நான்கு வருடங்களுக்கு குறையாத" சேவைக் காலம்/ செயற்பாட்டு ரீதியான தொழில் வாண்மை காலத்தை கணக்கிடும்போது, மேலே (ஆ), (இ) மற்றும் (ஈ) யில் குறிப்பிடப்படும் சேவைக் காலம்/ செயற்பாட்டு ரீதியான தொழில் வாண்மைக் காலம் என்பன கூட்டாக கருத்தில் கொள்ளப்படும்.

05. விண்ணப்பதாரிகள் நடைபெறவிருக்கும் எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் பெறுபேறுகளின் அடிப்படையில் நேர்முகத்தேர்வு/ களுக்கு அழைக்கப்படுவார்கள்.

**குறிப்பு :**

(i). விண்ணப்பப்படிவக் கட்டணமான 7,500/= ரூபாவினை மக்கள் வங்கியின் டாம் வீதி கிளையில் பேணப்பட்டு வரும் 297100199025039 என்ற இலக்கத்தை உடைய "செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழு" எனும் கணக்கில் இடும் வகையில் எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும் பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட வைப்புச் சீட்டினை பதிவுத் தபாலினூடாகவோ அல்லது நேரில் அலுவலகத்திற்கு வந்து சமர்ப்பிப்பதன் மூலமாகவோ விண்ணப்பப்படிவத்தை பெற்றுக்கொள்ளலாம். பணம் செலுத்துவதற்காக வைப்புச்சீட்டினை நிரப்பும் போது வைப்புச் சீட்டின் உரிய இடத்தில் விண்ணப்பதாரியின் பெயர், முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

(ii). விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவங்களை பெற்றுக் கொள்ளல் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்தல் போன்றவற்றை பதிவுத்தபாலினூடாகவோ அல்லது அலுவலகத்திற்கு நேரில் சமுகமளித்தோ மேற்கொள்ள முடியும்.

(iii). அரச சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்வதற்கும் சமர்ப்பிப்பதற்குமான முகவரி :

**செயலாளர்,**
**நீதிச்சேவை ஆணைக்குழு,**
**நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,**
**கொழும்பு - 12.**

**எச். எஸ். சோமரத்ன**
**செயலாளர்**
**நீதிச்சேவை ஆணைக்குழு**

**2024 ஜூன் மாதம் 28 ஆம் திகதி,**
**கொழும்பு - 12,**
**நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்தில்.**